**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 06-03-2025

SC. 32/2023

அ.சா 6 – மங்கையர்கரசி , அரசு மருத்துவர், அரசு மருத்துவமனை ஒசூர்

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் மங்கையர்கரசி என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மங்கையர்கரசி | கணவர் பெயர் | பாலமுருகன் |
| வயது | 43 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது ஒசூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 11.07.2021 ம் தேதி காலை 9: 15 மணி அளவில் அலுவல் மருத்துவராக பணியில் இருந்த போது பசவராஜி த/பெ லஷ்மய்யா என்கிறா 58 வயது ஆண் நபரை அவரது மகன் பிரகாஷ் சிகிச்சைக்கு அழைத்து வந்தார், அவரை விசாரிக்கும் போது அடையாளம் தெரிந்த 2 ஆண்நபர்கள் மற்றும் பெண் நபர் ஒருவர் கிருஷ்ணம்மா கொத்துர் என்ற இடத்தில் வைத்து காரில் இருந்து இறங்கும் போது அரிவாள் மற்றும் கடப்பாரையால் தாக்கியதால் காலை 08.30 மணியளவில் காயம் ஏற்பட்டதாக காயம்பட்டவர் கூறினார். அவரை பரிசோதனை செய்யும் போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது கையில் லேடரல் பார்ட்டில் ஒரு கிழிந்த காயம் , அதன் வடிவம் அரை நிலவு வடிவில் காயம் காணப்பட்டது.

நோயாளிக்கு தையல் போடுவதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை அதனால்

அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்படவில்லை , ஊசி போடப்பட்டு காயத்திற்கு மருந்து கட்டு போடப்பபட்டது. அதன் பிறகு நோயாளி ஒசூர் குணம் சுப்பர் ஸ்பசாலிட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்துள்ளார். அவர் மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 11.07.2021 முதல் 12.07.2021 வரை சிகிச்சை எடுத்து கொண்டுள்ளார். அவரது உள்நோயாளி IP No. 1942 ஆகும். அந்த மருத்துவமனையிலும் அவருக்கு வலது கையில் அரை நிலவு வடிவில் காயம் காணப்பட்டதாகவும் அதற்கு சிகிச்சை அளிக்கப்படதாகவும் தெரிவிக்கப்பட்டது. நோயாளிக்கு அவரது வலது கையில் ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச் சான்று **அ.சா.ஆ. 6** ஆகும். என்னை காவல் ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை :–**

காரில் இருந்து இறங்கும் போது தாக்கப்பபட்டதாக தான் பசவராஜ் என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வேறு மருத்துவமனைக்கு செல்லும் படி நான் கருத்துரை எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் எங்கள் மருத்துவமனையில் நோயாளிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை மற்றும் ஒசூர் குணம் சுப்பர் ஸ்பசாலிட்டி மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சை ஆகியவற்றின் அடிப்படையில் காயச் சான்று வழங்கினேன். ஒசூர் குணம் சுப்பர் ஸ்பசாலிட்டி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட மருத்துவ குறிப்புகள் எனக்கு எப்படிவந்தது என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குணம் சுப்பர் ஸ்பசாலிட்டி மருத்துவமனையில் உள்ள கேஸ் சீட்டை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நேரத்தில் மருத்துவமனையில் இருந்து நோயாளி விடுவிக்கப்பட்டார் என்ற குறிப்பு காயச் சான்றிதழில் இல்லை என்றால் சரிதான். சமச்சீரற்ற ஒரு கூர்மையான பரப்பில் கீழே விழும்போது நோயாளிக்கு காயச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. போலிசார் என்னிடம் ஆயுதத்தை காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. நோயாளிக்கு

ஏற்பட்டுள்ள நிலவின் பாதி வடிவிலான வளைவு காயம் , அதே வடிவிலான ஆயுதத்தால் தாக்கினால் தான் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் அப்படி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் திடீரென்று தாக்கும் போது நோயாளி விலகினால் அதே வடிவிலான ஆயுதத்தால் தாக்காமலும் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்கிறார் சாட்சி. நான் சொல்வது போல் பிறை வடிவில் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 06-03-2025

SC. 32/2023

அ.சா 7 – அருண் , மருத்துவர்.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் **அருண்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருண் | தந்தை பெயர் | சின்னசாமி |
| வயது | 36 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது அருண் மெடிகல் சென்டர் என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன் இதற்கு முன்பு பகுதி நேரமாக லஷ்மி தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்தேன். அரசு மருத்துவமனையிலும் பணிபுரிந்து வந்தேன். கடந்த 19.07.2021 ம் தேதி மதியம் 11: 30 மணியளவில் லஷ்மி மருத்துவமனையில் இருந்து எனக்கு தொலைபேசி மூலம் அழைப்பு வந்தது. அந்த அழைப்பில் சசீதரன் 26 வயது ஆண் நோயாளி கையில் அடிபட்டு வந்திருப்பதாகவும் அந்த நோயாளிக்கு சிகிச்சை அளிக்கவேண்டும் என்றும் கேட்டு கொண்டனர். அதன் பேரில் நான் அந்த லஷ்மி மருத்துவமனைக்கு சென்று நோயாளி சசீதரன் என்பவரை பரிசோதனை செய்து மேற்கொண்டதில் அவருக்கு இடது முன் கையில் வீக்கம் இருந்தது, காயம் கன்றிப்போய் இருந்தது அதை தொட்டு பரிசோதிக்கும் போது வலி அதிகமாக இருந்தது முன் கையில் அசைவுகள் இல்லாமல் இருந்தது. தன்னை தனக்கு தெரிந்த 3 நபர்கள் கடந்த 11.07.2021 ம் தேதி தாக்கியதாக நோயாளி என்னிடம் சொன்னார். நோயாளிக்கு அவரது இடது முன் கையில் ஏற்பட்ட காயத்திற்கு X RAY எடுத்து பார்த்ததில் இடது முன் கையில் எலும்பு முறிவு காயம் இருந்தது தெரிய வந்தது.

மேற்படி எலும்பு முறிவு காயத்திற்கு அறுவை சிகிச்சை மூலம் சிகிச்சை அளிக்க பரிந்துரைத்தேன் அதன் பேரில் நோயாளியும் ஒப்புக் கொண்டதின் பேரில் எலும்பு முறிவிற்கு பிளேட் மற்றும் ஸ்கூரு பொறுத்தி அறுவை சிகிச்சை செய்து முடிக்கப்பட்டது. கடந்த 20.07.2021 ம் தேதி நோயாளி நலமுடன் இருந்ததால் மருத்துவமனையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். நோயாளிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். அந்த காயச் சான்று **அ.சா.ஆ 7** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. அரசு மருத்துவமனையில் என்னுடைய பணி நேரம் காலை 8.00 மணி முதல் 01.00 மணி வரை என்கிறார். சம்பவ சமயம் நான் மருத்துவ விடுப்பில் இருந்ததாக தன்னிச்சையாக சாட்சி சொல்கிறார். நான் எலும்பு முறிவு படிப்பில் முதுகலை பட்டம் பெற்றுள்ளேன். மெடிகோ லீகல் சம்மந்தமான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு லஷ்மி மருந்துவமனைக்கு அனுமதி இல்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. நோயாளியை யார் சிகிச்சைக்கு அழைத்து வந்தார்கள் என்ற குறிப்பு காயச் சான்றிதழில் இல்லை என்றால் சரிதான். நுண் கதிர் படம் யார் எடுத்தது என்ற விவரக் குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நுண் கதிர் படம் எடுக்கப்பட்டதற்கான எண் காயச் சான்றிதழில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

நுண் கதிர் படத்தை போலிசார் மருத்துவமையில் வாங்கி சென்றார்களா என்பது எனக்கு தெரியாது. காயத்தின் நிறத்தை வைத்து அதன் வயதை சொல்ல முடியுமா என்றால் அதை ஒரு காரணியாக வைத்துக்கொள்ளலாம் என்றும் அதை மட்டும் வைத்து வயதை உறுதியாக சொல்லமுடியாது என்கிறார் சாட்சி. நோயாளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவரத்தை போலிசாருக்கு நான் தகவல் தெரிவிக்கவில்லை. லஷ்மி மருத்துவமனையில் விபத்து பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என்றால் எனக்கு தெரியாது. ஒரு கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்படும் போது வெளிப்புற காயமும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் கூர்மையான பகுதி முதலில் தாக்கி இருந்தால் வெளிப்புற காயமும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. கூர்மையான பகுதி முதலில் தோள்பகுதியை தாக்கிய பின்பு தான் உள்ளே சென்று காயம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்று நீதிமன்ற கேள்வியாக கேட்டபோது கூர்மையான ஆயுதத்தால் கூர்மையான பகுதி

தாக்கியிருந்தால் வெளிப்புற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. 3 எலும்புகள் சேரக்கூடியது தான் எல்போ என்றால் சரிதான். எல்போவில் இருந்து நீட்சியடைந்து வருவது தான் அல்னாவும் ரேடியசும் என்றால் அவை இரண்டும் சேர்ந்து தான் எல்போ என்கிறார். எல்போவில் இருந்து எவ்வளவு தூரத்தில் காயம் இருந்தது என்றால் அல்னாவின் மேல் பகுதியில் இருந்தது என்கிறார். குறிப்பிட்டு எவ்வளவு தூரத்தில் இருந்தது என்று அளந்து பார்க்கவில்லை அதை அளந்து பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை என்கிறார் சாட்சி.

2. ஏற்கனவே காயத்திற்கு முதலுதவி சிகிச்சை எடுத்து கொள்ளப்பட்டதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த மருத்துவமனை குணம் மருத்துவமனை என்று தெரிந்து கொண்டேன். மெடிகோ லீகல் டெக்ஸ்ட் படி என்னுடைய சாட்சியம் ஏற்கத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur